
உ

# மணப்பாறை ஸ்ரீ நல்லாண்டவர் கோயில் வரலாறு

# கும்பாபிஷேக மலர்



முன் கோபுரம்

தேவஸ்தான வெளியீடு

3—9—54

உ

# மணப்பாறை

# ஸ்ரீ நல்லாண்டவர் கோயில் வரலாறு

## கும்பாபிஷேக மலர்

**(தல புராணச் சுருக்கமும், ஆலய விளக்கமும் அடங்கியுள்ளன)**


திருச்சி உறையூர் பெண்கள் உயர்நிலைப்பள்ளி ஓய்வுபெற்ற
தமிழ் ஆசிரியரும்,
'அற்புதக்கனி, திருமுருகாற்றுப்படை விளக்கம்' ஆசிரியரும்,
H. R. & C. E. ஆதரவில் பல கோயில் வரலாறுகளை
எழுதியவரும் ஆகிய

**திரு. R. பஞ்சநதம் பிள்ளை**

அவர்களால் எழுதப்பெற்று



ஸ்ரீ நல்லாண்டவர் தேவஸ்தானம்

திரு. **சாமி. வெங்கடாசலம்** அவர்கள்,
நிர்வாக அதிகாரி.

ராவ்சாகிப் திரு. **S. குழந்தைவேலு பிள்ளை** அவர்கள்
பெருநிலக்கிழார்-நிர்வாக தர்மகர்த்தர்.

திரு. **R. குமாரலெக்கய்ய நாயக்கர்** அவர்கள்
பொய்யப்பட்டி-ஜமீன்தார், பரம்பரை தர்மகர்த்தர்.

திரு. **M. ராஜகோபால் நாயுடு** அவர்கள்
மிராசுதார், தர்மகர்த்தர்.

ஆகிய திருப்பணிக் குழுவினரால் வெளியிடப்பெற்றது.

**தேவஸ்தான வெளியீடு**

3—9—54



உரிமை செய்யப்பெற்றது]


[விலை 8 அணா

# முன்னுரை

தெய்வ உணர்ச்சியை உண்டாக்கும் சிறப்பிடங்களாக ஆன்ஞோர்கள் அமைத்த ஆலயங்கள் விளங்குகின்றன. அவைகளுள் திருச்சிராப்பள்ளி ஜில்லா - குளித்தலை தாலூகாவைச் சேர்ந்த மணப்பாறையில் உள்ள ஸ்ரீ நல்லாண்டவர் கோயில் ஒன்று. இது திருச்சிராப்பள்ளிக்குத் தெற்கே சுமார் 23 மைல் தூரத்தில் உள்ளது. கோயிலுக்கு வருவோர் கோயிலின் பெருமைகளையும் அறிந்துகொள்வது நலம். சென்னை அறநிலையப் பாதுகாப்பு இலாகா (Hindu Religious and Charitable Endowments) அனுப்பிய சுற்றறிக்கையின்படி இவ்வரலாறு முதற் பதிப்பைத் தழுவிப் புதிய சேர்க்கைகளுடன் வெளி வருகிறது. இதில் ஸ்ரீ நல்லாண்டவர் முதலிய தெய்வங்களின் சிறப்புக்களும், ஆலய விளக்கமும், பல ஆராய்ச்சிகளும் அடங்கியுள்ளன. பல கோயில்களின் வரலாறுகளை எழுதி வரும் திருச்சி தமிழ் ஆசிரியர் திரு. R. பஞ்சநதம் பிள்ளை அவர்கள் வரலாற்றுடன் கூடிய இம்மலரை எழுதி உதவினூர்கள். 3—9—54-ல் நிகழும் கும்பாபிஷேக வைபவத்தை முன்னிட்டு, அறநிலையப் பாதுகாப்பு இலாகா துணை ஆணையாளர் திரு. S. கணேசம் பிள்ளை, B. A., அவர்கள் விஜயம் செய்தார்கள்.

கும்பாபிஷேக நினைவாகத் திருப்பணிக் குழுவினரால் இம்மலர் வெளியிடப் பெற்றது. கோயிலின் பல காட்சிகளைக் காட்டும் படங்களும் இதில் சேர்க்கப்பட்டுள்ளன. அன்பர்கள் படித்து ஸ்ரீ ஆண்டவர் அருளைப் பெறுக.

ஸ்ரீ நல்லாண்டவர்
தேவஸ்தானம்,
மணப்பாறை.
3—9—'54.


**சாமி. வெங்கடாசலம்,**
நிர்வாக அதிகாரி.

# உள்ளடக்கம்

பக்கம்

1. கோயிலும் இருப்பிடமும் ... 5
2. கோயிலின் அமைப்பு ... 7
3. கோயிலின் படம் ... 11
4. மூர்த்திகளின் பெயர்கள் ... 12
5. தீர்த்தங்கள் ... 13
6. தலப் பெருமைகள் ... 13
7. சுற்றுக் கோயில்கள் ... 14
8. தினப் பூஜையும் விழாவும் ... 17
9. வருமானமும் சொத்துக்களும் ... 17
10. நிர்வாகம் ... 18
11. கோயில் கட்டணங்கள் ... 18
12. கல்வெட்டுக்கள் ... 19
13. சிற்பங்கள் ... 19
14. சரித்திர வரலாறுகள் ... 20
15. புராண வரலாறுகள் ... 21
16. திருப்பணிகள் ... 23
17. துதிப் பாடல்கள் ... 25

சில அனுபவங்கள் ... 28



ஆண்டவர் கோயில் விமானமும்

முத்துக்கருப்பண்ணசுவாமி விமானமும்

உ
சிவமயம்

# மணப்பாறை
# ஸ்ரீ நல்லாண்டவர் கோயில் வரலாறு

## 1. கோயிலும் இருப்பிடமும்


ஆதி அந்தங்கடந்த பரம்பொருளாகிய இறைவன், உலகத்திலுள்ள பல உயிர்களும் துன்பம் நீங்கி இன்பம் பெற்று உய்யும் வண்ணம் தன் கடந்த நிலையான அருவ நிலையிலிருந்து இறங்கி. இப்பூவுலகத்தில் ஆங்காங்குள்ள பல தலங்களில் உருவத் திருமேனி கொண்டு எழுந்தருளியிருந்து பக்தியுடன் வழிபடும் அடியார்களுக்கு அருள் செய்து வருகின்றான். அத்தகைய சிறப்பிடங்களே ஆலயங்கள் ஆகும். பசுவின் உடல் முழுவதும் பால் மறைந்திருந்த போதிலும் மடியின் மூலமாகவே பால் வெளிப்படுவது போலவும், சூரியன் எங்கும் பரவியிருந்தாலும் பளிங்குக் கல்லின் மூலமே கிரணங்கள் விரைவில் வெளிப்படுவது போலவும், நிலத்துக்கடியில் நீர் இருந்தாலும் தோண்டிய இடத்தில்தானே நீர் தோன்றுவதுபோலவும், இறைவன் எங்கும் வியாபித்திருந்த போதிலும் பெரியோர்கள் அமைத்த ஆலயங்களில் உள்ள மூர்த்திகளின் மூலமாகவே இறைவன் வெளிப்பட்டு அன்பர்களுக்கு அருள் செய்வான். "இருஞ்சுரபிக்கெங்கும் உருக்காண ஒண்ணுத பால் முலைப்பால் விம்மி ஒழுகுவதுபோல வெளிப்பட்டருள்வன் அன்பர்க்கே" (சிவஞான சித்தியார்). ஆதலின் பெறுதற்கருமையான மனிதப்பிறப்பைப் பெற்றவர் அனைவரும் பசுபதியாகிய பரமனை அன்பினால் வழிபட்டு அவன் வகுத்த நன்னெறியில் சென்று, அவனருளைப் பெற முயலுதல் தலையாய கடமையாகும். "மானுடப் பிறவிதானும் வகுத்தது மனவாக்காயத்து ஆனிடத்தைந்தும் ஆடும் அரன் பணிக்காக அன்றோ" என்று ஆன்றோரும் கூறியுள்ளார்.

தென்னாடாகிய தமிழ் நாட்டில் பெருமான் உறையும் கோயில்கள் பல உள்ளன. அவை சிவன் கோயில்கள்,

திருமால் கோயில்கள், முருகன் கோயில்கள், அம்மன் கோயில்கள் முதலியன. இவைகளில் அந்தந்த சமயத் தலைவர்களால் பதிகம் பாடப்பெற்ற தலங்களும், தல புராணங்களைக்கொண்ட கோயில்களும், பல புலவர்களால் தனிப்பாடல் பெற்ற தலங்களும், பக்தர்களால் அமைக்கப் பட்ட அபிமானத் தலங்களும் பெரும்பான்மையாக உள் ளன. இவைகளில் மணப்பாறையில் உள்ள ஸ்ரீ நல் லாண்டவ சுவாமி கோயிலும் சிறந்ததாகும்.

இத்தலம் திருச்சிராப்பள்ளி ஜில்லா குளித்தலை தாலூகாவில் மணப்பாறை ரயில்வே நிலையத்திலிருந்து வடக்கே சுமார் ஒன்றரை மைல் தூரத்தில் கண்ணுடை யாம்பட்டி கிராம எல்லைக்குள் மாமுண்டி ஆற்றங்கரையில் அமைந்துள்ளது. திருச்சியிலிருந்து தெற்கே செல்லும் முக்கிய கல் பாதையில் (Southern Trunk Road) 220-221-வது மைல் கற்களுக்கு மத்தியில் இக்கோயில் இருக் கிறது. திருச்சி, குளித்தலை, மதுரை, திண்டுக்கல், புதுக் கோட்டை, விராலிமலை முதலிய இடங்களிலிருந்து மோட் டார் பஸ்களில் வருபவர்கள் இக்கோயில் பக்கத்திலேயே இறங்கவும் ஏறவும் வசதியாய் உள்ளது. கோயிலுக்குப் பக்கத்தில் தேவஸ்தானத்தைச் சேர்ந்த இரு சத்திரங்கள் உள்ளன. இச்சத்திரங்களில் ஒன்று மிகவும் பழுதடைந் திருக்கிறது. இது ஒன்றிற்குத்தான் பழுது பார்க்கவேண் டும். மேலும் மணப்பாறை ரயில் நிலையத்துக்கு அருகில் ராணி மங்கம்மாள் நினைவாக விநோதமாகக் கட்டப்பட்ட முசாபரி பங்களாவும் (Travellers' Bungalow) ஊருக்குள் லோகல்பண்டு சத்திரமும் உள்ளன. வாடகை வீடுகளும் கிடைக்கும்; இவைகளில் எவ்விடத்திலாவது தங்கி யிருக்கலாம்.

ஒரு காலத்தில் மணப்பாறை, தாலூகாவின் தலைமை இடமாயிருந்து வந்து பிற்காலத்தில் 1861-ல் மாற்றப்பட் டுக் குளித்தலை தாலூகாவில் சேர்ந்திருக்கிறது. இவ்வூரில் டிப்டி தாசில்தார் ஆபீஸ், சப் ரிஜிஸ்தரார் ஆபீஸ், போலீஸ் ஸ்டேஷன், சப்-ஜெயில் முதலிய அலுவலகங்கள் உள்ளன. 1889-ம் ஆண்டில் ஏற்படுத்திய லோகல் பண்டு மருந்தகம் (Dispensary) உள்ளது. புதன்கிழமை தோறும் பெரிய



முன் கோபுரமும், வாயிலும்

சந்தை நடைபெறுகிறது. இது ஜில்லாவிலேயே பெரிய சந்தை எனச் சொல்லப்படுகிறது. இவ்வூருக்குத் தென் மேற்கில் 16 மைல் தூரத்தில் உள்ள கல்பட்டி என்னும் ஊரில் ஒருவிதமான சுண்ணும்புக் கற்கள் கிடைக்கின்றன. மணப்பாறையைப் பற்றிய செய்திகள், திருச்சிஞப்பள்ளி கெஜட்டீர் என்னும் புத்தகத்தில் பின் வருமாறு சொல்லப் பட்டுள்ளன ;—

"*Manapparai* :—Twenty two miles south of Kulitalai. Is a hamlet of sivalur the head quarters of a deputy Tahsildar and sub-Registrar and contains a railway station, Police station, sub-Jail, local Fund dispensary founded in 1889, travellers' bungalow and a local fund choultry, with an endowment. It was formerly the head quarters of the taluk of the same name which was abolished in 1861. The largest weekly market in this district takes place here every wednesday. The travellers' bungalow is a rather curious construction and is attributed to queen Mangammal (1689–1704) Manapparai was the scene of an exciting little affair on June 7th 1795 when Lieut Oliphant with some twenty men surprised and captured an insurgent poligar there. The poligar's retainers assembled in large numbers to effort a rescue and attacked Oliphant in the choultry which he defended for nine hours against several assaults until he was released by a detachment of dragoons" (Trichinopoly Gazetteer)

## 2. கோயிலின் அமைப்பு

ஸ்ரீ நல்லாண்டவர் கோயில் மாமுண்டி ஆற்றங்கரையில் பசுமையான தோப்பில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. கோயிலுக்கு வெளியில் ஓர் பிராகாரமும், உள்ளே ஓர் பிராகாரமும் உள்ளன. கீழ்புற மதிலில் 5 கலசங்களையுடைய ஓர் சிறு ராஜகோபுரமும் நுழை வாயிலும் உள்ளன. வெளியிலிருந்தபடியே தரிசிக்க மூலவராகிய ஸ்ரீ ஆண்டவரின் உருவமும், பிற தேவதைகளின் உருவங்


களும் இக்கோபுரத்தில் அமைக்கப்பட்டுள்ளன. இக்கோயிலின் அடிமைக் குடிக் கிராமங்களில் ஒன்ருன முத்தப்புடையான்பட்டி நாட்டாண்மைக்காரர் நா. கருப்புடையாரால் 1940-ல் கட்டப்பட்ட படியால் இதற்கு உடையார் கோபுரம் எனப் பெயர் வழங்குகிறது.

உள் பிராகாரத்தில் பார்ப்போர் மனதைப் பிரமிக்கச் செய்யும்படியான சுதையால் அமைக்கப்பெற்ற மிகப் பெரிய யானை, குதிரை உருவங்கள் உள்ளன. யானையின் மேல் ஸ்ரீ நல்லாண்டவர் அமர்ந்து காட்சி தரும் வகையில் உருவம் உள்ளது. இவைகளை அடுத்து ஆறுகால் மண்டபம், நாலுகால் மண்டபம், மகா மண்டபம், அம்மன் கோயில் மண்டபம் முதலிய மண்டபங்கள் உள்ளன. சுமார் 40 ஆண்டுகளுக்கு முன் இக் கோயிலின் சேவார்த்திகளுள் ஒருவரான பங்களூர் திரு. மாமுண்டியா பிள்ளை அவர்களால் ஆறுகால் மண்டபம் கட்டப்பட்டதாகத் தெரிகிறது. அம்மன் மண்டபத்தில் கல்யாணங்கள் நடைபெறுவதால் கல்யாண மண்டபம் என வழங்குகிறது. நாலுகால் மண்டபத்தின் இருபுறமும் கிழக்கு நோக்கி நின்ற கோலத்தில் சுமார் 15 அடி உயரமுள்ள சுதையால் அமைக்கப்பட்ட துவாரபாலகர்களின் உருவச் சிலைகள் உள்ளன. இவைகளுக் கெதிரே தென்புறத்தில் அனுமாரின் உருவமும், வடபுறத்தில் கருடாழ்வாரின் உருவமும் உள்ளன

**சந்நிதிகள்** :-உள் பிராகாரத்தில் பல தெய்வங்களின் சந்நிதிகள் பல இடங்களில் உள்ளன.

**ஸ்ரீ நல்லாண்டவர்** :–இவர் கோயிலின் பிரதான தெய்வம். மான்பூண்டி ஆண்டவர் என்றும் வழங்கப்படும். இவர் அமர்ந்த கோலத்துடன் கம்பீரமாக விளங்குகிருர். இம்மூர்த்தியின் திருவுருவமும், அருள் நோக்கும் கண்டோர் மனம் கசிந்து உருகும் படி அமைந்துள்ளன

**சப்த கன்னிகைகள்** :–இவர்கள் ஏழு வகையான தேவதைகள். இவர்கள் முறையே பிராமி, மஹேஸ்வரி, கௌமாரி, வைஷ்ணவி, வராஹி, மாஹேந்திரி, சாமுண்டி எனச் சொல்லப்படுகிருர்கள். இவர்கள் சகல செல்வங்களையும்



ஏழுகருப்பர் கோயில்

தரக் கூடிய லக்ஷ்மி அம்சம் பொருந்திய தேவதைகளாக விளங்குகிருர்கள். இவர்கள் சந்நிதியே இக்கோயிலில் அம்மன் சந்நிதியாக உள்ளது. இவர்கள் இக்கோயிலில் தொடர்பு கொண்ட விவரம் ஸ்ரீ நல்லாண்டவர் வரலாற்றில் காட்டப் பெற்றுள்ளது.

**முத்துக்கருப்பண்ண சுவாமி** :—சுவாமி சந்நிதிக்கும் அம்மன் சந்நிதிக்கும் இடையில் இம்மூர்த்தியின் சந்நிதி உள்ளது. இம்மூர்த்திக்குப் பொந்து புளி கருப்பண்ண சுவாமி என்ற பெயரும் வழங்கி வருகிறது. இக்கோயில் ஏற்படுவதற்கு முன் ஆதியிலிருந்தே இம்மூர்த்தி இருந்து வருவதாகவும், இத்தேவதையால் சகல தோஷங்களும் நிவர்த்தியாவதாகவும் சொல்லப்படுகிறது இம்மூர்த்தியின் வரலாறு பின்னே கூறப்பட்டுள்ளது.

**லாட சந்நியாசி** :—இவர் வடதேசத்திலிருந்து வந்த ஓர் சித்தர் என்றும், இவரை வழிபடுவோருடைய சகல நோய்களும் நீங்கப்படுவதாகவும் சொல்லப்படுகிறது.

**மதுரைவீர சுவாமி** : இவர் திருச்சியில் இருந்த விஜயரங்க நாயக்க மன்னரிடம் காவலாளியாயிருந்ததாகவும், பிறகு மதுரையை ஆண்டுவந்த திருமலை நாயக்கரின் வேண்டுகோளுக்கிணங்கி மதுரை சென்று தன் வீரதீரச் செயல்களால் திருடர்களால் உண்டாகும் பயத்தைப் போக்கி வீரனுக விளங்கியதாகவும், திருச்சியிலிருந்து மதுரை செல்லும்போது இவ்விடத்தில் தங்கிச் சென்றதால் இம்மூர்த்தியை வழிபட்டு வருவதாகவும் சொல்லப்படுகிறது. பழந்தமிழருடைய வீரவழிபாட்டிற்கு (Hero worship) இவர் உதாரணமாக விளங்குகிருர்.


**ஏழு கருப்பர்** :— ஒரே கல்லில் ஏழு உருவங்களாக அமைக்கப்பட்ட இவர்கள் மகாசக்திவாய்ந்த வனதேவதைகள் என்றும், ஸ்ரீ நல்லாண்டவரின் கட்டளைகளை நிறைவேற்றும் பொருட்டு இங்கு எழுந்தருளியிருக்கிருர்கள் என்றும் கூறப்படுகிறது. இச் சிலைகளுக்குத்தான் சகல அபிஷேகங்களும் செய்யப்படுகின்றன. இச் சந்நிதியில் தான் வழிபடுவோர் சத்தியக்கட்டளை நிறைவேற்றுவது

வழக்கம். மேலும் நம்பிக்கைத் துரோகம், களவு, பில்லி சூனியம், வைப்பு முதலிய தீங்கு செய்தோரைத் தக்கபடி தண்டிக்கவும், அவற்ருல் பீடிக்கப்படுவோர்களைக் காப்பாற்றவும் மிகச் சக்திவாய்ந்த தெய்வங்களாக விளங்குகின்றன. இச் சந்நிதிக்கு இருபுறமும் இரண்டு முனிகளின் சிலைகள் உள்ளன.

**பாரிகாரர்** :—இப்பெயர்கொண்ட இரண்டு கற்சிலைகள் மதுரைவீரசுவாமிக்குத் தென்புறம் இருக்கின்றன. இவைகள் தமுக்கடிக்கும் பாவனையாக உள்ளன. ஸ்ரீ நல்லாண்டவர் ஊர்வலம் புறப்படுகையில் தமுக்கடித்துச் சுவாமியின் புறப்பாட்டையும், வருகையையும் முன்னெச்சரிக்கையாக மக்களுக்கு அறிவிப்பார்கள் என்று சொல்லப்படுகிறது. இவர்களுக்கு முன்னேடியான் என்றும், சாம்பமூர்த்தி என்றும் பெயர்கள் உண்டு.


**பேச்சியம்மன்** :—இதன் கோயில் உள் பிராகாரத்தில் தென்மேற்கு மூலையில் வடக்கு நோக்கி இருக்கிறது. இதற்குக் காட்டேறி என்றும் பெயருண்டு. இத்தேவதையை வழிபட்டால் சந்ததி விருத்தி உண்டாகும் என்று சொல்லப்படுகிறது.


இக்கோயிலின் சுற்றுமதில் சுமார் 100 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டதாக வடபுற மதிலில் உள்ள ஓர் கல்வெட்டால் தெரிகிறது. இம்மதிலின் சுற்றளவு கிழமேலடி சுமார் 194. தென்வடலடி சுமார் 167. கோயிலுக்குள் தேவஸ் தான அலுவலகமும், வெளியே தேவஸ்தான சத்திரமும் உள்ளன. கோயிலின் அமைப்பைக் காட்டும் படம் தனியே உள்ளது.





பேச்சியம்மன் கோயில்

## 3. கோயிலின் படம்.




1. விநாயகர்
2. ஆண்டவர் (மூலஸ்தானம்)
3. ஸ்ரீ முத்துக்கருப்பண்ண சுவாமி
4. விருதுகள் அறை
5. சப்தகன்னிமார்
6. கல்யாண மண்டபம்
7. நிர்வாக அலுவலகம்
8. முன் மண்டபம்
9. யானை குதிரை சிலைகள்
10. ராஜாளிப்பட்டி யானை
11. லாடசந்நியாசி
12. சாமான் அறை
13. இராஜ கோபுரம்
14. மதுரைவீர சுவாமி
15. சத்திரம்
16. ஏழுகருப்பர்
17. பூசாரிகள் மடைப்பள்ளி
18. பட்டத்து யானை
19. சிறிய வாசல்
20. குருக்கள் மடைப்பள்ளி
21. பேச்சியம்மன்
22. சத்திரம்–தென்புறம்
23. பாலதண்டாயுதபாணி
24. கேணி



## 4. மூர்த்திகளின் பெயர்கள்

இக்கோயிலின் பிரதான மூர்த்தி ஸ்ரீ நல்லாண்டவர். இவருக்கு நல்லண்ணன் என்றும், மான்பூண்டி ஆண்டவர் என்றும் பெயர்கள் உண்டு. கோயிலின் ஐதீகப்படி ஒரு காலத்தில் இவர் சப்தகன்னிகள் என்னும் ஏழு தேவமாதர் களைக் காப்பாற்றி ஆட்கொண்டு அருளியதாலும், வழிபடு வோருடைய துன்பத்தைப் போக்கி நன்மையைத் தருவ தாலும் நல்லண்ணன் என்றும், நல்லாண்டவர் என்றும் பெயர்கள் வழங்குகின்றன. மாரீசனுன மாயமான் உலா வித்திரிந்தபோது சீதையின் விருப்பப்படி அதைப் பிடிப்ப தற்கு இராமர் அம்பு செலுத்தி மானைப்பூண்ட காரணத் தால் மான் பூண்டி ஆண்டவர் என்றும், இவ்விடத்தில் செல்லும் ஆற்றிற்கு மான்பூண்டிஆறு என்றும் பெயர்கள் வழங்குகின்றன. மாமுண்டிக் குளத்தின் உடைப்பால் ஏற்பட்டதால் மாமுண்டி ஆறு எனவும் சொல்லப்படு கிறது.

ஒரு நாமமும் உருவமும் இல்லாத உயர்பொருளாகிய இறைவனை, ஆன்றோர்கள் தங்கள் அன்புமேலீட்டால் பற்பல நாமங்களை வைத்துப் போற்றிவருகின்றார்கள். இறைவனும் அவ்வக்காலங்களில் அடியார்களுக்கு அருள் செய்து வருகின்றான். காலமானது சென்ற காலம், நிகழ் காலம், வருங்காலமாக மாறிக்கொண்டே செல்கின்றது. காலங்கடந்த இறைவன் அன்றும், இன்றும், என்றுமாக நிலைத்துநின்று அருள் செய்கின்றான். இவ்வகையில் இறை வனை ஆண்டவனாகவும், ஆள்கின்றவனாகவும், ஆள்பவ னாகவும் போற்றிப் புகழ்வர். "அடியேனை ஆளாக் கொண்டு ஆண்டானை" என்றும், "வானோர் உலகமெல் லாம் ஆண்டானை" என்றும் அப்பர் கூறுகின்றார். நாலா யிரப் பிரபந்தத்தில் "ஆள்கின்றான் ஆழியான்" என்றும், "ஆட்கொள்ளத் தோன்றிய ஆயர்தம் கோனை" என்றும், "ஆளும் பரமனைக் கண்ணனை" என்றும் ஆழ்வார்கள் பாடியுள்ளனர். இவ்வகையில் இக்கோயில் இறைவர் ஸ்ரீ நல்லாண்டவராக விளங்குகிறார். பழனியில் முருகப் பெருமான் ஆண்டவராக விளங்குவதும், பிற சமயத்தார் களும் ஆண்டவர் என்ற பெயரால் வழிபட்டு வருவதும் காண்க.

மேலும் இக்கோயிலில் சப்த கன்னிகைகள் முத்துக் கருப்பண்ண சுவாமி, லாடசந்நியாசி, மதுரைவீர சுவாமி, ஏழுகருப்பர், பாரிகாரர், பேச்சியம்மன் முதலிய மூல மூர்த்திகளின் சந்நிதிகள் தனித்தனியே உள்ளன. இவைகளையன்றிச் சுமார் 7 வருஷங்களுக்குமுன் செய்யப்பெற்ற ஸ்ரீ ராதாருக்மணி சமேத ராஜகோபால சுவாமியின் உற்சவ விக்ரகங்கள் உள்ளன.

## 5. தீர்த்தங்கள்

கோயிலுக்குப் பக்கத்தில் மான்பூண்டி என்ற மாமுண்டி ஆறு செல்கின்றது. கோயிலுக்குத் தென்புறம் ஓர் கிணறு உள்ளது. இதிலிருந்து கோயில் காரியங்களுக்கு நீர் கொண்டுவரப்படுகிறது.

இத்தலத்தின் விருக்ஷம் இன்னதென்று தெரியவில்லை. நீண்டகாலமாயுள்ள மின்னைமரம் தென் பிராகாரத்தில் உள்ளது. சமீபத்தில் வைக்கப்பட்ட பவழமல்லிகை, புன்னை, பன்னீர் மரங்களும் உள்ளன. ஆதியில் ஓர் புளியமரப் பொந்தில் முத்துக்கருப்பண்ண சுவாமி இருந்து வந்ததாகவும், அம்மரத்தின் அடையாளமாக முத்துக் கருப்பண்ண சுவாமி சந்நிதிக்குப்பக்கத்தில் மேல்தளத்தில் ஓர் பொந்து-துளைவிடப்பட்டுள்ளது.

## 6. தலப் பெருமைகள்

இத்தலம் பழங்காலம் முதற்கொண்டு பெருமை பெற்று வருகிறது. ஸ்ரீ நல்லாண்டவர் முதலிய பல மூர்த்திகளைத் தன்னகத்தே கொண்டது. ஸ்ரீ நல்லாண்டவர் பல அற்புதங்களைச் செய்து பக்தர்களை ஆட்கொண்டு அருள் செய்ததாகத் தெரிகிறது. குமாரவாடி ஜமீன்தார்களுக்கும், தமிழ்நாட்டில் பல இடங்களிலிருக்கும் குடிமக்களுக்கும் குலதெய்வமாக விளங்கிவருகிறது. சமய வேறுபாடின்றிச் சைவர், வைணவர், முதலியோரும், பிற சமயத்தார்களும், அந்தணர், வைசியர், வேளாளர் முதலிய பல சாதியார்களும் இக்கோயில் ஆண்டவரை வழிபட்டுப் பிரார்த்தனை செலுத்துகிறார்கள். பெரும்பான்மையாக

யாதவ குலத்தார்களுக்கே இக்கோயில் வழிபாட்டுத் தல மாக விளங்குகிறது. பல்வேறு மனப்பான்மையுடைய பக் தர்களின் வழிபாட்டுக்கு அநுகுணமாகப் பூஜிக்கத்தக்க தும், அவரவர்களின் விருப்பங்களைப் பூர்த்திசெய்ய வல்லது மாகிய பல தேவதைகள் இக்கோயிலில் உள்ளன. ஆடி மாதம் வெள்ளிக்கிழமைகளில் நாட்டின் பல இடங்களி லிருந்து ஆயிரக்கணக்கானவர்கள் வந்து பூஜையிட்டுக் கொண்டாடுகிறார்கள்.


சுவாமி அம்மன் சந்நிதி மண்டபங்களின் மேல்தளத் தில் மீன்களின் உருவம் செதுக்கப்பட்டிருப்பதால் இக் கோயில் ஒருகாலத்தில் பாண்டிய மன்னர்களின் ஆதிக் கத்தில் ஏற்பட்டிருக்கலாம் எனத்தெரிகிறது.

மேலும் இக்கோயிலுக்கு ஒரு காலத்தில் விடப்பட்ட ஓர் பாய்ச்சல் காளைமாடு உள்ளது. இது ஆண்டவர் பெய ரால், "ஆண்டவர் எருது" என்று அழைக்கப்படுகிறது. பாய்ச்சலில் இதை ஒருவராலும் அடக்கமுடியாது. இப் பக்கத்தில் இதைத் தெய்வமாகவே மதித்து வணங்குகிறார் கள். இதன் படமும் காட்டப்பெற்றுள்ளது.

சுவாமி சந்நிதிக்குத் தெற்கே உள்ள பட்டத்து யானைமீது ஸ்ரீ ஆண்டவரின் உருவம் உள்ளது. இவ்விட மிருந்து உண்டாகும் பல்லியின் ஓசையைத் தெய்வ வாக் காகவும், உத்தரவாகவும் கருதுகிறார்கள். கோயிலுக்கு வருபவர்கள் இவ்வோசையின் மூலம் தங்கள் பலாபலன் களை அறிந்து செல்கிறார்கள். இவ்வோசை ஓரே பதிலாக தெற்கிலிருந்து வெளிவருவதால் இதற்கு ஏகதெக்ஷணம் என்று பெயர் வழங்குகிறது.

## 7. சுற்றுக்கோயில்கள்

ஸ்ரீநல்லாண்டவர் கோவிலைச் சேர்ந்த சுற்றுக் கோயில் கள், ஸ்ரீ அகத்தீஸ்வரர் கோயில், ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ் வரர் கோயில், ஸ்ரீ வெங்கடேசப் பெருமாள்கோவில் என் பன. இவைகள் வெவ்வேறு இடங்களில் உள்ளன. இவை களின் வரலாறுகள் சுருக்கமாகக் காட்டப் பெற்றுள்ளன.



ஆண்டவர் எருது

## 1. ஸ்ரீ அகத்தீஸ்வரர் கோயில்

இக்கோயில் ஸ்ரீ நல்லாண்டவ சுவாமி கோயிலுக்கு வடக்கில் சுமார் ஒரு பர்லாங் தூரத்திலிருக்கிறது. மிகவும் புராதன கோயில்களில் இது ஒன்று. அதிக கிலமாயிருந்ததை 1941-ம் ஹூத்தில் மராமத்து செய்து இடிந்து கிடந்த திருமதில்களும் புதுப்பிக்கப்பட்டன. முனனுள் நிர்வாக அதிகாரி திரு. முத்துமல்லா ரெட்டியார் காலத்தில் கவனிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

அதிக ஜனப்புழக்கமில்லாத ஒரு மேட்டுப் பாங்கான இடத்தில் இக்கோயில் அமைந்துள்ளது. முற்காலத்தில் இவ்விடம். 'மாமுண்டி குளம்' என்னும் ஒரு பெரிய தடாகத்தின் கரையென்று தெரிகிறது. இதற்கறிகுறியாகக் கோயிலருகிலேயே ஏரிஜலம் வெளியில்போக முற்காலத்தில் கட்டப்பட்டு இடிந்துபோன மதகின் இறக்கைச் சுவர்கள் இன்றும் காணப்படுகின்றன. இம் மாமுண்டி குளத்தின் உடைப்பால் உண்டான காரணத்தினுலோ ஸ்ரீ நல்லாண்டவ சுவாமி கோயிலுக் கருகில் போகும் ஆற்றிற்கு மாமுண்டியாறு என்று பெயர் வழங்கப்படுகிறது. இக்கோயில் தென்புறம் சுவரில் சில கல்வெட்டுகள் இருக்கின்றன. இவ்விடத்திலிருந்து பார்த்தால் புதுக்கோட்டையைச்சேர்ந்த பிரசித்திபெற்ற விராலிமலை ஆறுமுகக்கடவுளின் ஆலயகோபுரம் நன்கு தெரிகிறது.

இதற்கு இருகால பூஜை நடந்து வருகிறது. பிரம்ம உற்சவம் கிடையாது. விஜய தசமி, தைப் பூசம். சித்ரா பவர்ணமி விசேஷங்களில் உற்சவம் நடத்தப்படுகின்றது. குருக்களுக்கு மாதச் சம்பளம் கொடுக்கப்பட்டு வருகிறது. பண்டாரம் திரு உலகு முதலியவர்கள் மானியம் அனுபவித்து ஊழியம் செய்து வருகிருர்கள்.

---

## 2. ஸ்ரீ மீனுட்சிசுந்தரேஸ்வர சுவாமி கோயில்

ஸ்ரீ மீனுக்ஷிசுந்தரேஸ்வர சுவாமி கோயில், மணப்பாறைக் கடுத்த வையம்பட்டி ரயில்வே ஸ்டேஷனுக்குத் தென்புறம் சுமார் ஒன்றரை மைல் தூரத்தில் குமாரவாடி

கிராமத்திலிருக்கிறது. இஃது சர்வ சாதாரணமாகக் கிராமங்களில் காணப்படும் கோயில்களைக் காட்டிலும் மிகப் பெரியது. ஆதியில் குமாரவாடி ஜமீன்தார்களின் வாசஸ்தலமாயிருந்த காரணத்தினால் இக் குக்கிராமத்தில் இவ்வளவு பெரிய கோயில் சர்வ அங்கங்களுடனும் பொருந்தியிருக்கிறது. எனினும் பின்னால் சரிவரப் பராமரிப்பின்றி கைவிடப்பட்டு மிகவும் ஜீரணமா யிருக்கிறது. மற்றத் தேவஸ்தானங்களைவிட இக்கோயிலில்தான் கோயிலுக்குண்டான முக்கிய அம்சங்களோடு உற்சவ விக்ரகங்கள் சரிவர அமைக்கப்பட்டுள்ளன.

இந்தக் கோயிலுக்கு இரண்டுகால பூஜை நடந்து வருகிறது. பிரம்ம உற்சவம் கிடையாது. விஜய தசமி. தைப் பூசம் திருவாதிரை விசேஷங்களில் உற்சவம் நடத்தப் பட்டு வருகிறது.

கோயில் சுவர்களும் மேல் தளமும் பிராகாரத் திருமதில்களும் புல் பூண்டுகள் முளைத்து வேர் மண்டி மிகவும் கிலமாயிருக்கிறது. தேவஸ்தானத்தில் போதுமான நிதியில்லாததாலும், இதர கோயில்களின் மராமத்துக்களை மேற்கொண்டு விட்டதாலும் இக்கோயிலை இதுவரை மராமத்து செய்ய இயலவில்லை. கூடிய சீக்கிரம் இது கவனிக்கப் படவேண்டும்.

---

## 3. ஸ்ரீ வெங்கடேசப்பெருமாள் கோயில்

இக்கோயில் மணப்பாறையிலிருந்து கொட்டாம் பட்டி மேலூர் மார்க்கம் மதுரை போகும் ரஸ்தாவின் பக்கத்தில் 10 மைல் தூரத்தில். கருப்பூர் கிராமம் மஜரா மானுங்குன்றம் என்னும் கிராமத்திலிருக்கிறது. ஸ்ரீ நல்லாண்டவ சுவாமி வகையரு தேவஸ்தானங்களுள் இது மிகவும் சிறியது. இப்பெருமாள் கோயிலில் பிராம்மண அர்ச்சகர்களின்றி வைஷ்ணவ நாயக்கர்களால் பூஜை செய்யப்பட்டு வருகிறது. தேவஸ்தான சகல ஊழியர்களுக்கும் மானியம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

இதில் இருகால பூஜை நடந்து வருகிறது. இக் கோயிலுக்கும் பிரம்ம உற்சவம் கிடையாது. விஜயதசமி திருக்

கார்த்திகை, ஏகாதசி முதலிய விசேஷ தினங்களில் உற்சவம் நடத்தப்படுகிறது.

இக்கோயிலும், கோயிலைச் சேர்ந்த மடைப்பள்ளி, கிணறு முதலியவைகளும் பழுது பார்க்கவேண்டிய நிலையிலிருக்கின்றன. தேவஸ்தானத்தின் செல்வநிலை சற்று அபிவிருத்தியடைந்தவுடனே இம்முக்கியமான மராமத்துகள் கவனிக்கப்படவேண்டும்.

## 8. தினப்பூஜையும் விழாவும்

ஸ்ரீ நல்லாண்டவர் கோயிலில் உள்ள மூர்த்திகளுக்குத் தினந்தோறும் காலை மாலை ஆகிய இரண்டுகாலப் பூஜைகள் நிகழ்கின்றன. கற்சிலைகளுக்குமட்டும் அபிஷேகம் நடைபெறும். இக்கோயிலுக்குத் தேர். வாகனங்கள் முதலியவை கிடையா. அதனால் திருவிழா நடைபெறுவதில்லை. ஆனால் புதிதாய்ச் செய்யப்பட்ட ராதா ருக்குமணி சமேத ஸ்ரீ ராஜ கோபால சுவாமியின் உற்சவச் சிலைக்கு மட்டும் ஆண்டுக்கொருமுறை விழா நடைபெறும். ஸ்ரீ கிருஷ்ணன் பிறப்பைக் குறித்துக் கொண்டாடும் உறியடி நாளில் இச்சிலையை எழுந்தருளச் செய்து விழா நடைபெறும்.

## 9. வருமானமும் சொத்துக்களும்

இக் கோயிலுக்குக் குளித்தலை தாலூகாவில் கலிங்கப்பட்டி, மாதம்பட்டி, வடுகப்பட்டி, என்னும் பூரா இனும் கிராமங்களிலும், கண்ணுடையான்பட்டி செவலூர், கு. பெரியபட்டி, குமாரவாடி, புத்தானத்தம், கருப்பூர் என்னும் அயன் கிராமங்களிலும் நன்செய், புன்செய் நிலங்கள் மானியமாக விடப்பட்டுள்ளன. இனும் கிராமங்களன்றி நஞ்சை புஞ்சை நிலங்களில் இருவார பாத்தியங்கள் கோயிலைச் சேர்ந்திருந்தபோதிலும் எல்லாக் கிராமங்களிலும் மேல்வாரம் மட்டும் நடைமுறையில் வசூலிக்கப்பட்டு வருகிறது. இருவார பாத்தியதையும், நியாயம், தர்மம், ஒழுங்கு, சட்டம் இவைகளை அனுசரித்துக் கோயிலுக்குச் சேரவேண்டியது. அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை கோயில் நிர்வாக அதிகாரிகள் கவனிக்கவேண்டும். இவ்வகையில் கோயிலுக்குச் சராசரி ரூபாய் பத்தாயிரம் வருஷ வரு

மானம் வரும். மேல்சொல்லிய இனும் கிராமங்கள் மூன்றும் Madras Estates Abolition Act 1948-ன்கீழ் சர்க்காரால் எடுத்துக்கொள்ளப்பட்டு தற்பொழுது பசலி ஒன்றுக்கு இடைக்காலத் தொகையாக (Interim payment) ஆக ரூ. 1092—10—2 குளித்தலை தாலூகாவில் தேவஸ்தானத்துக்குக் கொடுக்கிறார்கள்.

## 10. நிர்வாகம்

இக் கோயிலுக்குக் குமாரவாடி ஜமீன்தார்கள் 1842-ம் ஆண்டு முதல் பரம்பரை தர்மகர்த்தர்களாக இருந்து வந்திருக்கிறார்கள். பிறகு இந்துமத தர்ம பரிபாலன போர்டார் அவர்கள் 1932ல் ஒரு திட்டம் ஏற்படுத்தினார்கள். அதன்படி பரம்பரை தர்மகர்த்தர் அவர்களின் மேற்பார்வையின் கீழ் ஷை போர்டாரால் நியமிக்கப்பட்ட மானேஜர்களால் 1933 முதல் 1937 வரையில் நிர்வாகம் நடைபெற்று வந்தது. மீண்டும் 1938ல் ஷை திட்டம் திருத்தப்பட்டு வேறு இரண்டு தர்மகர்த்தர்கள் நியமிக்கப்பட்டுப் போர்டாரால் அமர்த்தப்பட்ட நிர்வாக அதிகாரியால் (Executive Officer) தற்போது நிர்வாகம் நடந்து வருகிறது.

## 11. கோயில் கட்டணங்களும் அறிவிப்பும்

| | |
|---|---|
| தீபாராதனை ஒரு சந்நிதிக்கு | 0—1—0 |
| ,, பூரா சந்நிதிக்கும் | 0—4—0 |
| அர்ச்சனை | 0—4—0 |
| காதுகுத்து | 0—6—0 |
| முடி | 0—6—0 |
| கல்யாணம் | 12—0—0 |
| பாத்திர வாடகை பா. 1க்கு | 0—2—0 |
| வெளியில் எடுத்துப்போக | 0—4—0 |

**அறிவிப்பு**:—சேவார்த்திகள் கோயிலுக்குக் காணிக்கையாகக் கொண்டுவரும் தங்கம், வெள்ளி நகை, பாத்திரம், பதுமை, விளக்கு, தானியம், கால்நடை முதலியவைகளைக் கோயில் மணியக்காரரிடம் தெரிவித்து அச்சுச் சீட்டில் விவரமாகப் பதியவைத்துத் தங்கள் கையெழுத்துப் போட்டுக்கொடுத்து ரசீது பெற்றுக்கொள்ளவேண்டும். பதியா

மலும் ரசீது பெருமலும் காணிக்கை சாமான்களை எவரிடமும் கொடுக்கக்கூடாது. ரொக்கக் காணிக்கைகளைக் கோயிலில் வைக்கப்பட்ட உண்டியல்களில் நேரில் சேர்த்து விடவேண்டும்.

## 12. கல்வெட்டுக்கள்

ஸ்ரீ நல்லாண்டவர் கோயிலில் கல்வெட்டுக்கள் இல்லை. மணப்பாறைக்குத் தென்கிழக்கில் சுமார் 7 மைல் தூரத்தில் உள்ள **கொடும்பாளூரில்** ஒருகாலத்தில் சிறப்புற்றிருந்த சிவன் கோயிலில் சில கல்வெட்டுக்கள் (13) உள்ளன. அவைகள் கவர்ன்மெண்டாரால் நகல் எடுக்கப்பட்டு 1907ம் ஆண்டில் 129 முதல் 141 வரை உள்ள எண்களாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இவைகளிலிருந்து அறியப்படும் செய்திகளாவன :—

முற்காலத்தில் இப்பகுதி கோனுடு, வடகோனுடு, கடலடையாது இலங்கைகொண்ட சோழ வளநாடு முதலிய பெயர்களால் வழங்கப்பெற்று வந்தது. கொடும்பாளூர்க் கோயில் பெருமானுக்குத் திருமுதுகுன்றமுடைய நாயனுர், ரிஷபப் பெருமானடிகள் ஆகிய பெயர்கள் வழங்கப்பெற்று வந்தன. முதலாம் ராசேந்திர சோழன், ஜடாவர்மன் வீர பாண்டிய தேவன், சுந்தரபாண்டியன், பரகேசரிவர்மன், பாண்டியன் மாறவர்மன், குலசேகரதேவன், மதுராந்தக சுந்தர சோழன் முதலிய அரசர்கள் காலத்தில் கொடும்பாளூர்க் கோயிலுக்கு நிலங்களும், கிராமங்களும் விடப்பட்ட செய்திகளும், விக்கிரமகேஹஸ்வரன் என்பவனுல் விமானங்கள் கட்டப்பட்டதும், வேறுபல செய்திகளும் தெரியவருகின்றன. சுற்றுக் கோயில்களில் ஒன்ருகிய ஸ்ரீ அகத்தீஸ்வரர் கோயிலில் சில கல்வெட்டுக்கள் இருப்பதாகத் தெரிய வருகிறது.

## 13. சிற்பங்கள்

இக்கோயிலில் ஸ்ரீநல்லாண்டவர், முத்துக்கருப்பண்ண சுவாமி, சப்தகன்னிகள், லாடசந்நியாசி. மதுரைவீரன், பேச்சியம்மன் முதலிய மூர்த்திகள் சுதையினுல் அமைக்கப்


பட்டுப் பல வர்ணங்களால் அழகுபடுத்தப்பட்டுள்ளன. இவ்வாறே மிகப்பெரிய யானை, குதிரை உருவங்களும், துவாரபாலகர் உருவங்களும் அமைக்கப் பட்டுள்ளன. கோயிலில் பூஜைக்குரிய கற்சிலைகள் அல்லாமல் பிற்காலத்தில் கல்லில் அமைத்த பலவகைச் சிலைகள், கோயிலின் ஒரு பக்கத்தில் வரிசையாக நிறுத்தப்பட்டுள்ளன.

## 14. சரித்திர வரலாறு

1795-ம் ஆண்டில் மணப்பாறையில் ஓர் முக்கிய சம்பவம் நிகழ்ந்தது. ராணுவத்தைச் சேர்ந்த (Oliphant) ஆலிபெண்ட் என்பவன் இருபது வீரர்களைத் துணையாகச்சேர்த்துக்கொண்டு கட்டுக்கடங்காத ஓர் பாளையக்காரனைக் கைது செய்து ஓர் சத்திரத்தில் சிறைப்படுத்தியிருந்தான். அப்போது பாளையக்காரனைச் சேர்ந்த கூட்டத்தார்க்கும், அதிகாரிக்கும் 9 மணி நேரம் வரையில் சண்டை ஏற்பட்டு முடிவில் பாளையக்காரன் விடுவித்துக்கொண்டு செல்லப்பட்டான். இச்செய்தி ஜில்லா கஜெட்டீர் புத்தகத்தில் காணப்படுகிறது.

மேலும் மணப்பாறைக்குப் பக்கத்தில் உள்ள கொடும்பாளூர் என்பது ஒரு காலத்தில் சிறப்புற்றிருந்தது. அங்குள்ள சிவன் கோவில் சிறந்த சிற்பங்களைக் கொண்ட கட்டிடமாயிருந்து பிற்காலத்தில் பழுதடைந்ததாகத் தெரிகிறது. சிதைந்த கோபுரங்களும், ஆங்காங்கு வயல்களில் புதைந்து கிடக்கும் லிங்கங்களும் பழமைக்குச் சின்னங்களாக விளங்குகின்றன. அவ்விடமுள்ள கல் நந்தி, தஞ்சாவூர்க் கோயிலில் இருக்கும் பெரிய நந்தியின் முக்கால் பங்கு அளவினதாக உள்ளதென்று சொல்லப்படுகிறது. இவ்விடமுள்ள அழிந்த பொருள்களைக் கொண்டு திருச்சிராப்பள்ளியில் உள்ள கோட்டை முதலிய கட்டிடங்கள் கட்டப்பட்டனவாகச் சொல்லப்படுகிறது.

"The neighbouring village of *Kodumbalur* is mentioned in the Silappadikaram a well known Tamil classic which is ascribed in the 1st century A. D. Tradition says that the place was once a flourishing and



துவார பாலகர் சிலைகளில் ஒன்று

well built town, and that the Trichinopoly fort and temple were built with the materials of its dismantled buildings. Its former importance may be inferred from the style of its ruined gopurams and the well carved blocks of granite and lingams which are often found buried in its fields. One of the Nandis (Siva's bulls) in it is three - fourth's size of the famous stone bull in the Tanjore temple " (Trichinopoly Gazetteer)

## 15. புராண வரலாறுகள்

### 1. ஸ்ரீ நல்லாண்டவரும் சப்த கன்னிகளும்

இக் கோயிலின் மேல்புறம் இருந்த ஓர் குளத்திற்குச் சப்த கன்னிகள் என்னும் ஏழு தேவப் பெண்கள் வந்து நீராடுவது வழக்கம். ஒரு நாள் கரையில் களைந்து வைத்த அவர்கள் உடைகளைத் துஷ்டர்கள் திருடிச் சென்றுவிட்டதைக் கண்டு மனங்கலங்கி நீரிலேயே நின்று வருந்தினர்கள். அப்போது எவரோ ஒருவர் அவர்களுடைய களவு போன ஆடைகளை மீட்டுக்கொண்டு வந்து கரையில் வைத்துச் சென்றார். அவர்களில் ஒருத்தி இதைக்கண்டு "யாரோ நல்லண்ணன் நம் உடைகளைக் கொண்டு வந்து வைத்துப் போகிறார்" என்று கூறினளாம். எல்லோரும் கரையேறி உடைகளை உடுத்திக்கொண்டு ஆண்டவரைப் போல் ஆபத்தில் உதவிய அவருக்கு நன்றி செலுத்தச் சென்றார்கள். அவர் அவர்களைத் தன் சகோதரிகளாகப் பாவித்துக் கோயிலில் தன் பக்கத்தில் இருக்கச் செய்து அவர்களுக்கே முதற் பூஜை நடக்கும்படி ஏற்பாடு செய்தார். நல்லண்ணன் என்பது நாளடைவில் நல்லாண்டவர் என மாறி வழங்குகிறது.

### 2. மான்பூண்ட வரலாறு

நல்லோரைக் காத்து அல்லாரை அழிக்க அவதரித்த ஸ்ரீராமர், தன் தம்பி இலக்குமணர், தேவி சீதை இவர்களுடன் தண்டகாரணியத்தில் வசித்து வந்தபோது மாரீசன் என்னும் அசுரன் மாயமானக உருமாறித்


தோன்றினுன். சீதையின் விருப்பப்படி இராமர் மானைப் பிடிக்கத் துரத்திச் சென்று அதன்மீது அம்பு எய்தார். அது இலக்ஷ்மணு என்று சத்தமிட்டு மறைந்தது. அப்போது இராமர் மானின் மாயத்தை உணர்ந்து சந்தேகித்துக் களைப்புடன் அமர்ந்தார். வேடன் ஒருவன் அவரைப் போல் ஓர் உருவத்தை இக்கோயில் இருக்கும் இடத்தில் அமைத்துப் பூஜித்து வந்தான். அக்காலம் முதல் எல்லோரும் வழிபட்டு வருகிருர்கள். மானைப் பூண்ட (அடைந்த) காரணத்தால் மான்பூண்டி ஆண்டவர் என்றும், பக்கத்தில் செல்லும் ஆறு மான்பூண்டி ஆறு என்றும் பெயர்கள் வழங்குகின்றன. மான்பூண்டி என்பது நாளடைவில் மாமுண்டி என மாறி வழங்குகிறது.

## 3, பொந்து புளி கருப்பண்ணர் வரலாறு

முற்காலத்தில் இக் கோயில் இருக்கும் இடத்தில். பெரிய பொந்துள்ள ஒரு புளிய மரம் இருந்தது. அதன் வழியாய் இடையர்கள் பால் கொண்டு போகும்போது கால் தட்டுண்டு பாற்குடம் கீழே கவிழ்ந்த வண்ணம் நிகழ்ந்துகொண்டே வந்தது. அம்மரத்தில் ஏதாவது தேவதை இருக்கலாம் என்றெண்ணி இடையர்கள் அதை வெட்ட ஆரம்பித்தார்கள். அப்போது ஒருவன்மீது ஆவேசம் வந்து ' மரத்தை வெட்டாதீர்கள். இம்மரத்தின் பொந்தில் கருப்பண்ணத் தெய்வம் இருக்கிறது. அதற்கு ஒரு கோயில் அமைத்துப் பூசித்து வந்தால் உங்கட்கு நன்மை உண்டாகும்" என்று கூறினுன். அவ்வாறே ஓர் கோயில் கட்டி உருவம் அமைத்து, ஆதியில் புளியமரப் பொந்தில் இருந்ததால் பொந்துப்புளி கருப்பண்ண சுவாமி என்று பெயரிட்டு வழிபட்டு வருகின்ருர்கள். அவ்விடத்தில் புளியமரம் இருந்ததற்கு அடையாளமாகக் கோயிலில் இவருடைய சந்நிதிக்கு மேல் தளத்தில் ஒரு பொந்து - துவாரம் விடப்பட்டுள்ளது.

## 4. லாட சந்நியாசி வரலாறு

இவர் வட நாட்டிலிருந்து வந்த சித்தர். இவர் வேழமலைக்குச் செல்வதற்காக இம் மார்க்கமாக வரும்போது



லாடசந்நியாசி கோயில்

இவ்விடத்தில் ஸ்ரீ நல்லாண்டவர் முதலிய தெய்வங்களின் பெருமைகளைக் கண்டார். இவ்வளவு பெருமைகளையுடைய தேவதைகளின் சக்திகளைத் தம்முடன் கொண்டுபோக எண்ணித் தமது மந்திர வலிமையால் ஆண்டவர் கோயிலில் உள்ள எல்லாத் தேவதைகளின் சக்திகளையும் ஒரு கலசத்தில் அடைத்து எடுத்துப் போக முயன்றார். அப்போது பொந்து புளி கருப்பர் இவர் மந்திரத்துக்குக் கட்டுப்படாமல், கலசத்தை உடைத்துச் சந்நியாசியையும் பிடித்துக் காலில் விலங்கிட்டு இக் கோயிலிலேயே இருக்கச் செய்து அவருக்கு வேண்டியவைகளை உதவுவதாகவும், கோயிலுக்கு வரும் நோயாளர்களின் நோய்களை மணி மந்திரங்களால் தீர்க்கும்படி கட்டளையிட்டதாகவும் சொல்லப்படுகிறது.

(இவ்வரலாறுகள் பழங்காலம் முதல் செவிவழிச் செய்திகளாக வழங்கப்பட்டு வருவதால், தேவஸ்தான வெளியீட்டின் முன் பதிப்புப்படியே சேர்க்கப்பெற்றன.)

## 16. திருப்பணிகள்


நமது முன்னோர்களின் நாகரிக வாழ்வுக்கு எடுத்துக் காட்டாக விளங்குவன முன்னோர்கள் எடுப்பித்த திருக்கோயில்களாகும். இவைகள் பக்தியைஉண்டாக்கும் இடங்களாவதன்றிச் சிற்பங்கள் நிறைந்த சேகரங்களாகும். இவைகளை முன்னோர்கள் தம் உயிரினும் மேலாகப் பாதுகாத்துப் பின்வழியினராகிய நமக்கு அருஞ்செல்வங்களாக வைத்துச் சென்றார்கள். நாட்டின் நலத்துக்கும், மக்களின் நல்வாழ்வுக்கும் கோயில்கள் இன்றியமையாதன. வாழ்க்கைக் கடலில் அகப்பட்டுத் துன்புறும் மக்களுக்குக் கோயில்கள் கலங்கரை விளக்கங்களாக விளங்குகின்றன. 'கோயில் விளங்கக் குடிவிளங்கும், ஆலயந்தொழுவது சாலவும் நன்று' என்பவை ஆன்றோர் கூறிய அனுபவ மொழிகளாகும்.

இத்தகைய பெருமைகளையுடைய கோயில்களுக்கு எவ்வித தீங்கும் நேராதபடி அவ்வப்பொழுது ஆவனசெய்ய வேண்டும். புதியதோர் ஆலயத்தை அமைப்பதைப் பார்க்கிலும், பழமையான கோயிலைப் புதுப்பித்தல் மிக்க புண்ணி

யத்தைத் தரும். இது பற்றியே "புதிதுறப்பணிகள் வேறு புரிவதின் பழயதொன்றை விதியுளி புதுக்குவோர்க்கு மிக்க புண்ணியந்தான் எய்தும்" என்று ஆன்றோர் கூறி யுள்ளார். இதன்படி ஸ்ரீ நல்லாண்டவர் கோயிலில் பல திருப்பணிகள் நிகழ்ந்திருக்கின்றன. சுமார் 100 ஆண்டு களுக்கு முன் ஸ்ரீ முத்துவீரப்ப லக்கய்ய நாயக்கர் தாயார் மல்லக்கம்மணி அவர்கள் விசாரணையில் கோயிலின் சுற்று மதில் கட்டப்பட்டதென்று வடபுறச் சுவரில் உள்ள கல் வெட்டால் தெரியவருகிறது. அதன் விவரம் :– "ஸ்வஸ்தி ஸ்ரீ விஜயாப்தி சாலிவாகன சகாப்தம் 1765 கலியுகாப்தம் 4944 க்குச் சரியான செல்லாநின்ற சொபகிருது கார்த் திகை மீ 6 தேதி மகா-ஸ்ரீ-ஸ்ரீ முத்து வீரப்பலக்கய்ய நாயக்கர் அவர்கள் தாயார் மல்லக்கம்மணி அவர்கள் விசாரணையில் கட்டிவைத்த திருப்பணி. கணக்கு சின்னுப் பிள்ளை, வெங்கடசுப்பய்யா மேஸ்திரி, அனந்தாசாரி கல்லடித்தவர்."

சுவாமி கோயிலுக்கு முன்னுள்ள ஆறுகால் மண்ட பம் சுமார் 50 ஆண்டுகளுக்கு முன் பங்களூர் திருமா முண்டியா பிள்ளை அவர்களால் கட்டப்பட்டது. பிறகு 1940-ல் கோயிலுக்கு முன்னேயுள்ள இராஜகோபுரம் முத்தப் புடையான் பட்டி நாட்டாண்மைக்காரர் நா. கருப் புடையாரால் கட்டப்பட்டு உடையார் கோபுரம் என வழங்குகிறது.

பிறகு எண்டோமெண்ட் போர்டார் அவர்களின் உத் தரவுப்படி திருப்பணிக் குழு அமைக்கப்பட்டுப் பொது மக் களிடமிருந்து பொருள் வசூலிக்கப்பட்டுவந்தது. 20-8-53ல் ஸ்ரீ நல்லாண்டவர் கோயிலில் திருப்பணிவேலை தொடங்கப் பட்டு நடந்து வந்தன. ஸ்ரீ நல்லாண்டவர், சப்தகன்னிகள் முத்துக்கருப்பண்ண சுவாமி, லாடசந்நியாசி, மதுரை வீர சுவாமி, பேச்சியம்மன் முதலிய சுதையினுல் ஆகிய சிலைகள் பழுதுபார்க்கப்பட்டுப் பல வர்ணங்களால் புதுப்பிக்கப் பட்டன. ஏழுகருப்பர், பாரிகாரர், விநாயகர் முதலிய தெய்வங்களுக்குக் கல் மேடைகள் அமைக்கப்பட்டன. மண்டபங்களில் வர்ணச்சித்திர வேலைகள் செய்யப்பட் டன. வெளியில் இருக்கும் ஸ்ரீ பாலதண்டாயுதபாணி



யானை — குதிரை வாகனச் சிலைகள்

சுவாமிக்குப் புதிதாகக் கோயில் ஏற்பட்டது. கோயிலில் உள்ள பெரிய யானை, குதிரை, துவார பாலகர்கள் முதலிய சிலைகள் புதுப்பிக்கப்பட்டன. சந்நிதிகளின் மேலிடத்தில் லாட சந்நியாசி, பேச்சியம்மன் ஆகிய சிலைகள் புதிதாய் அமைக்கப்பட்டன. சப்தகன்னியர் சந்நிதியில் துவார சக்திகள் இருவரின் சிலைகள் செய்யப்பட்டன. கோயிலின் கோபுரங்கள் யாவும், மேல் தளம், கீழ்தளம், சுற்றுமதில் முதலியவைகளும் புதுப்பிக்கப்பட்டன. சுவாமிக்குக் கற்கள் பதித்த தங்கத் திருநாமம்போன்ற ஆபரணங்கள் செய்யப்பெற்றன. கற்சிலைகளுக்கு அஷ்டபந்தன மருந்து சேர்க்கப்பெற்றது. இவைகள் செய்வதற்குமுன் திருப்பணி குழுவினரால் கோயிலில் மின்சார விளக்குகள் அமைக்கப் பெற்றன.

இவ்வாறுகத் திருப்டணிகள் நிறைவேறி நாளது ஜய ஆண்டு ஆவணித் திங்கள் 16-ம் நாள் யாகசாலைப் பூசை தொடங்கி 18-ம் நாள் (3—9—54) வெள்ளிக்கிழமை சுவாதி கூடிய சுபநாளில் காலை 6½ மணிக்குள் ஸ்ரீ நல்லாண்டவர் முதலிய மூர்த்திகளுக்கு மகா கும்பாபிஷேகம் சிறப்புடன் நடைபெற்றது. கும்பாபிஷேகத் திருப்பணி இனிது நிறைவேறும் வண்ணம் பங்கெடுத்துக்கொண்டு உதவிய அன்பர்களுக்கு ஸ்ரீ நல்லாண்டவர் பல நலன்களை அருள்வாராக.

இனி ஸ்ரீ நல்லாண்டவர் கோயிலைச் சேர்ந்த சுற்றுக் கோயில்களாகிய ஸ்ரீ அகத்தீஸ்வரர் கோயில். ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயில், ஸ்ரீ வேங்கடேசப் பெருமாள் கோயில் முதலிய கோயில்களிலும் இன்றியமையாத திருப்பணிகள் செய்யவேண்டியிருப்பதால் அவைகளையும் நிறைவேற்றிவைக்கும் வகையில் பொதுமக்கள் உதவி செய்வார்களாக.

## 17. துதிப் பாடல்கள்

மணப்பாறை ஸ்ரீ நல்லாண்டவர் தோத்திரப் பன்மணி மாலை. இவை பாகவதர் ஸ்ரீனிவாச ராகவையங்கார் அவர்களாலும், ஆசுகவி கிருஷ்ணப் பிள்ளை அவர்களாலும் பாடப் பெற்றவை. இதில் பலவகைக் கீர்த்தனைகளும், சந்தப் பாடல்களும், துதிப் பாடல்களும் அடங்கியுள்ளன.

1. ஆண்டவன் திருமுளரிகளிரண்டென
தகமதுள் வைத்தாளாய்ப்
பூண்டமாமலர் மங்கைதன் கேள்வனிப்
புவிபுகழரன் முன்னுள்
வேண்ட ஆயர்தங் குலக்கொழுந்தென
முனிவண்ணர் தொழூஉமான்
பூண்டி யாண்டவன் புகழ்பலபாடியாம்
பொன்னடி பணிவோமே.


2. வானுதி யண்டமெல்லாம் உட்கொண்டானை
வடவாலிற் கண்வளரு மாயோன்றன்னை
தானுன தனிமுதலாய்த் துலங்குவானை
தராதல மெல்லாமளந்த தம்பிரானை
மானுன நிசிசரனை மாய்த்தான் தன்னை
மான்பூண்டி பெயரானை மவுனுதீத
தேனுன தத்துவனை மறைக்கெட்டாத
செழுஞ்சுடர் நல்லாண்டவனைத் தியானிப்போமே.

3. காரேரர் மேனியனே கனகாம்பர சோபிதனே
பாரேரர் தேடும்வள மணப்பாறை ஆண்டவனே
கானகம்போனவனே கலைகபடமா னெய்தவனே
போனகம்புவனமெல்லாம்கொண்ட பூரணநாரணனே

4. பாதிப்பிறையணி நாதன்பொருப்பைப் பறித்தசைத்த
சூதிற்சிறந்த அரக்கன் சிரத்தைவில்லாற் றுணித்த
சோதிப் பராஸரவேத வேதாந்த சுடர்க்கொழுந்தே
ஆதித்த வாரம்வருவேன் மணப்பாறை ஆண்டவனே.

5. தேவாதிதேவா ஜெயமதன கோபாலா
பூவாதி அண்டமெலாம் பூத்தவனே—பாவமெலாம்
நீக்குந் திருக்கோவில் நின்றிலங்கும் ஆண்டவனே
காக்குங் கடன்நினக்கே காண்.

6. பாண்டவர்க்குத் தூதாகப் பாவியிடஞ் சென்றருளும்
ஆண்டவ தாண்டவ வானவனே—காண்டா
வனமெரித்த பற்குனற்கு வான்மணித்தே ரோட்டுங்
கனகாம் பரனேநீ கா.




சாமிவேங்கடாசலம்,
*நிர்வாக அதிகாரி.*


R. குமார லக்கய்ய நாயக்கர்,
*பரம்பரை தர்மகர்த்தா, (பொய்யப்பட்டி ஜமீன்தார்)*



ராவ் சாகிப் S. குழந்தைவேலு பிள்ளை
நிர்வாக தர்மகர்த்தா.



M. இராஜகோபால் நாயுடு,
தர்மகர்த்தா.



ஆசிரியர் R. பஞ்சநதம் பிள்ளை

நூல் எழுதியவர்.

7. பூமேவு கற்பகச்சோலை வளாவிப் பொன்னிவள
மாமேவு ஞானந்தரு மணப்பாறை நன்மாயவனும்
பாமேவு மான்பூண்டி நல்லாண்டவனது பாதமலர்த்
தேமேவு பங்கஜமெண்ணுபவர்க்கே வருஞ்செல்வமுமே.

8. எத்தேவருங்கலை மாமறையோர் நிதமேத்துகின்ற
புத்தேன்பொழில் மணப்பாறையை
நோக்கிப் புகுந்தவர்க்கு
வத்தாத செல்வத்திருவருளீந்துல காண்டுநிற்கும்
முத்தான மான்பூண்டி நல்லாண்டவனே
முதற்றெய்வமே.

9. மலமாசு வஞ்சங்குடிகொண்ட மங்கையர்வாழ்வதனை
பலமாசெனநம்பிவெம்பி நொந்தேனைப் பாராதிருக்கை
நலமாசுதந்திரம் நிற்கில்லையோஅது ஞாயமதோ
நிலமாசனந்தொழும்மான்பூண்டியாண்டவநின்மலனே.

**இராகம் : கமாஸ்** **தாளம் : ரூபகம்**

## பல்லவி

10. மான்பூண்டி மாதேவனே எனைக்காத்தருள் (மான்

## அநுபல்லவி

தேங்கமழ் மாலையணி தேவாதிதேவனே (மான்

## சரணங்கள்


மாயமானுகிவந்த மாரீசன் தனைக்கொன்ற
ஆயர் குலக்கொழுந்தே ஆதிமூலப் பொருளே (மான்

திருப்பாற்கடலில்வளர் சீதா லக்கய்யனே
விருப்பந்தந் தெனையாளும் வேதாந்ததேசிகனே (மான்

பொல்லாருறவைவிட்டுன் பொன்னடிதியானஞ்செயும்
நல்லாரிடமருவி நான்கடைத் தேறிஉய்ய (மான்

---

ஸ்ரீ நல்லாண்டவ சுவாமி நல்லடி போற்றி.



## சில அனுபவங்கள்

(சாமி வெங்கடாசலம், நிர்வாக அதிகாரி)

கல்யாணம் பண்ணிப்பார் — வீட்டைக் கட்டிப்பார் என்பது பழமொழி. அதைப்போன்று யாசகம் பண்ணிப் பார், கோயில் திருப்பணி நடத்திப்பார் என்றால் அது மிகையாகாது. மிகவும் கிலமடைந்த ஒரு ஆலயத்தைப் பழுதுபார்த்துக் கும்பாபிஷேகம் செய்து முடிப்பதென்றால் எவ்வளவு மாபெரும் சாதனை என்பதை - அதுவும் நாஸ்திகம் தலைவிரித்தாடும் இக்காலத்தில் விவரிக்கவும் வேண்டுமோ! விசையாகச் செல்லும் ஆற்றின் நீரை எதிர்த்து நீந்திக் கரையேறுவதற்குச் சமமன்றோ! எனினும் நாம் மேற்கொண்டுள்ள எக்காரியத்தையும் எந்த நிலையிலும் செய்துமுடிக்கும்வரை ஊண் உறக்கம் வேண்டுவதில்லேன், சுயசௌகரியங்களைக் கவனியேன் என்ற தளரா ஊக்கம் இருந்துவிட்டால் போதும்.

'சிதைவிடத் தொல்கார் உரவோர் புதையம்பிற்
பட்டுப்பா டூன்றுங் களிறு'

என்பதே போன்று, எவ்வாறு ஒரு களிறு போரில் புதையாகிய அம்பாற் புண்பட்டவிடத்தும் தளராது தன் பெருமையை நிலைநிறுத்துகின்றதோ அதேபோன்று எவ்வளவு

சிதைவு வந்தவிடத்தும் நாம் தொடங்கிய பணியைப் பூர்த்திசெய்து முடிக்கவேண்டியது நமது கடமை.

அதுமட்டுமோ — இவ்வுலகத்தில் நமக்குக் கிடைக்கப் போகும் கீர்த்தி (earthly fame) நமக்கு வேண்டுவதில்லை. இவ்வுடலைப் பிழிவது இறைவன் அளிக்கும் வெகுமதிக்கே என்று மனப்பூர்வமாய் நினைத்துவிட்டால் நம்மிடத்தில் நமக்கேயறியாத ஒரு உத்வேகம் தானே பிறந்துவிடு கின்றது. வழியில்காணும் கரடுமுரடுகள், முட்கள் யாவும் மறைந்து, பட்டுப்புற்கள் நிறைந்த பாதையாகிவிடும்.

ஒரு மனிதனிடத்தில் உண்மையான தெய்வபக்தியும், நம்பிக்கையும், அதனிடத்தில் தொண்டும் இல்லாவிட்டால் அவன் வாழ்வின் வளம் குன்றி இறுதியில் நசித்துவிடு வதை நாம் கண்கூடாகக் காண்கின்றோம் அன்றோ. அவ் வாறில்லாமல் நிம்மதியாய் வாழ்ந்தார் யார்?

பொருள் இரந்து திருப்பணி, கும்பாபிஷேகம் முதலி யன செய்வது என்பது ஆரம்பத்தில் என்னைப்பொருத்த மட்டில் பிள்ளைகள் தெருவில் மண் வீடுகட்டி விளையாடும் வேலையேபோன்றது என்ற எளிய எண்ணமே தோன்றி யது. செயலில் இறங்கியபொழுதுதான் எவ்வளவு பெரிய ஆழியின் கரையைக் காணத் தலைப்பட்டோம் என்பது புல னாகியது. பல சிக்கல்களும், பிரச்சினைகளும் எள்ளி நகை யாடும்பொழுது பூகம்பம் போன்ற உணர்ச்சி ஏற்படாமல் என்ன செய்யும்? ராபர்ட் புரூஸ், ஆப்ரகாம்லிங்கன், லெனின், இயேசு, முகம்மது நபி, மகாத்மா காந்தி, நேரு போன்ற பெரியார்களின் செயல்கள் நம் மனக்கண்முன் ஒன்றன்பின் ஒன்றாய்த் திரையிடத் தொடங்குகையில் தன் னம்பிக்கை யென்ற வேர் தானே கிளைக்கின்றது. அவர் களைப்போல் மாபெரும் சாதனைகள் புரியமுடியாவிட்டா லும் நமது காரியத்தில் ஓரளவேனும் வெற்றிபெருமலா போய்விடுவோம் என்ற மன உறுதி ஏற்படுகின்றது. பிறகு நம் வழியில் எத்தனைப் புல்லுருவிகள் தோன்றினாலும் நாம் அவைகளைப் பற்றிக் கவலைப்படத் தேவையில்லை.

நாம் யாசிக்கும்பொழுது எத்தனை விதமான உளம் படைத்தவர்களைக் காண நேரிடுகின்றது. இல்லையென்

போரும், நாளேவர் எனக் கூறி, ஏமாற்றுபவரும் இன்னு மெத்தனேயோ விதமான பிரகிருதிகளேச் சந்திக்குங்காலே அவர்கள் நம்மிடத்தில் சாகசம் புரியும்பொழுது நமக்கு வருத்தமா ஏற்படுகின்றது, அவர்களது செயலேப்பார்த்து ரசிக்கத்தான் தோன்றுகிறது. கௌரவத்திற்காகத் தானம் செய்பவர்களிடையேயும் உண்மைப் பக்தியுடன் செய்ப வர்களே மிகவும் காண்கின்ருேம். அவர்கள் பேசும்பொழுது மெய்யாகவே நமது மெய்யைச் சிலிர்க்கவைத்துவிடுகின்றது. அப்பொழுது நாஸ்திகம் நாடெங்கணும் பரவிவருகின்றது என்பன போன்றவைகள் வேண்டுமென்றே கூறப்படும் போலிக் கூற்ருேவென நாம் ஐயுறவேண்டியிருக்கின்றது. மக்கள் எவரும் தெய்வம் ஒன்றுண்டு என்பதை உணராமல் இல்லே என்பதை இச்சந்தர்ப்பத்தில் நான் நிதர்சனமாய்க் கண்ட உண்மையாகும். மக்கள் உள்ளத்தில் தெய்வ உணர்ச்சி மறைந்துவிடவில்லே. அதை வெளிக்காட்டிக் கொள்வதைத் தற்கால விஞ்ஞான காலத்தில் வெளிக் காட்ட அஞ்சி மறைக்க முயல்கிருர்கள் சிலர். இவர் களுக்கு விஞ்ஞானத்தையும், கடவுள் தன்மையையும் ஒப்பிட்டுப்பார்க்க அவகாசமில்லேபோலும்.

கோயில் திருப்பணி காரியத்திற்கு உறுதுணேயாயிருந்த முக்கியமானவர்களுள் நிர்வாக தர்மகர்த்தர் உயர்திரு. ராவ் சாகிப் சு. குழந்தைவேலு பிள்ளேயவர்கள் முதன்மையான வர்கள். என் முயற்சியே அவர்களது முயற்சி, அவர்களது முயற்சியே எனது முயற்சியாகும். அவர்களேப்பற்றிக் கூற நான் அருகதையற்றவனெனினும் வள்ளுவர் கண்ட குறளில் காணும் அறநெறிகள் அனேத்தும் அவர்களிடத் தில் மிளிர்கின்றன எனச் சுருக்கிச் சொல்லிவிட முடியும். தெய்வ பக்திகொண்ட உத்தம சீலர்களில் அவர்களும் ஒருவர். அவர்கள் பக்கபலமே இத்திருப்பணி வெற்றியின் இரகசியமெனலாம். அத்துடன் இதர தர்மகர்த்தாக் களான உயர் திருவாளர்கள் பொய்யப்பட்டி ஜமீன்தார் குமாரலக்கய்ய நாயக்கரும், ராஜகோபால் நாயுடுவும் நற் செயல்களில் எவ்வளவு தூரம் ஒத்துழைப்பைத் தரவேண்டு மென்பதற்கு எடுத்துக்காட்டாய் நின்ருர்கள்.

இச்சமயத்தில் கூத்தப்பார் திரு. அண்ணுமலே காரக் காச்சியார், திரு. கிருஷ்ணன் காரக்காச்சியார் ஆகியவர்

களையும் என்னால் மறந்துவிடமுடியாது. நல்ல பக்த சீலர்களும், கொடையாளர்களும்கூட. திருவரங்கம் திருமதி டாக்டர் கி. ராஜேஸ்வரியம்மாள் அவர்கள் பொருளுதவி தான் ஆரம்பக்கட்டத்தில் சுறுசுறுப்புடன் முன்னேற உதவியது என்பதை இவ்விடத்தில் வெளிப்படுத்தாமலிருப்பதற்கில்லை. பாலக்கரை, பாப்பாக்குறிச்சி ஆகிய ஊர்களை உறைவிடமாகக்கொண்ட எனது நண்பர் திரு. மா. சீனுவாசக் கோனார் அவர்களும், அவர்களது உறவினர்களான பெருமாள் கோனார் முதலியவர்களும் திருப்பணிக்குப் பொருள் இடர்ப்படும்பொழுதெல்லாம் கொடுக்கத்தவறியதில்லை.

இதில் முக்கிய அம்சம் என்னவென்றால் வெகுதொலைவில் வசிக்கும் இக்கோயிலைச் சார்ந்த சில குடிமக்கள் தங்கள் கனவில் நல்லாண்டவ சுவாமி தோன்றிய விபரத்தையும், திருப்பணிக்கு நன்கொடை செய்யச் சொல்லி மணப்பாறைக்கு விரட்டியடித்ததையும், அதன்படி தாங்கள் வந்ததையும் கூறி நன்கொடை புரிந்தவர்கள் கூறும் வரலாறு கேட்போரை மெய்ம்மயிர் பொடித்து நிற்கச் செய்துவிட்டது. இதற்குச் சான்றாக எண்ணிறந்தோர்களை, நேரில் கேட்டறிந்த என்னால் சொல்லமுடியும். திருவரங்கத்தைச் சேர்ந்த சிற்பி திரு. வேணுகோபால் ராஜு ஒரு நல்ல கலைஞர் என்பதை எடுத்துக் காட்ட இத்திருப்பணி அவருக்குச் சிறந்த வாய்ப்பை அளித்திருக்கின்றது. மணியம் பஞ்சாட்சரம் பிள்ளையும், இராம பண்டாரமும், மற்ற சிப்பந்திகளும் கும்பாபிஷேகத் திருப்பணியில் சிரத்தை காட்டியது பாராட்டற்குரியது.

இன்னும் இவ்வாறு எத்தனையோ எனது நண்பர்களும் அன்பர்களும் பொருள் உதவி தந்தும், என்னுடன் ஒருசேரப் பங்குகொண்டு உழைத்தும் இருப்பதை என்வாழ்நாட்களில் எப்படி மறக்கமுடியும்?

இவ்வரிய சந்தர்ப்பத்தை முன்னிட்டு இவர்களை அடிக்கடி சந்தித்து பல நற்செய்திகளை நவின்றுகொண்டு ஆங்காங்கே ஒன்று கூடி ஒரு நற்காரியத்தை முன்னிட்டு நன்கொடை பெறுவதற்காகச் செல்லும் பொழுது ஏற்

படும் புளகாங்கிதத்திற்கு ஈடுயிணை வேறேதேனு முண்டோ? நம்மிடம் எவ்வளவு பரந்த நோக்கமும், அறிவு விசாலமும் அனுபவமும் வந்து சேர்கின்றன! மேலும் புதியதாக ஒரு கோவில் கட்டி முடிப்பதைவிட நம் முன்னோர்களின் எலும்பிலும் இரத்தத்திலும் கட்டப்பட்ட ஆலயங்களைப் பழுதுபார்த்துச் செம்மைப் படுத்துவதில் கிடைக்கும் புண்ணியம்மட்டும் சிறிதளவென்று சொல்லி விட முடியுமா? இதனால் இம்மையிலும் மறுமையிலும் அடையும் பேரின்பத்துடன் நமக்காக நம் மூதாதையர்கள் நம்மிடம் விட்டுச் சென்றிருக்கும் இறைவனது சிலைகளை யும், கலைச் செல்வங்களையும் பாதுகாத்து நமது சந்ததியார் களும் அதன் பலனை அடைய வழி செய்தவர்களாகின் றோம். இதன்றி நமது முன்னோர்களையும் நினைவிலிருத்திக் கௌரவித்த பெருமை நமக்குக்கிடைக்கின்றது.

அந்நியர் மரவுரி தரித்துத் திரிந்த காலத்து நம் நாட்டு மக்கள் நீண்ட காலம் நல்ல நாகரிகத்தில் வாழ்ந்து வந்திருக் கின்றார்கள் என்பதன் குறிகளே இன்று நாம் எங்கணும் காணும் கோயில்களும் குளங்களுமாகும். இவைகளி லிருந்து அவர்களது தெய்வ நம்பிக்கையும், அதனால் அறிவோடு கூடிய ஆற்றல் தன்மையும், கலை உள்ள மும், நிம்மதியான வாழ்க்கை முறையும் நமக்கு அறியக் கிடக்கின்றன. மனக் கற்பனையில் சித்தரிப்பதற்கும் கட்டுக் கடங்காமல் சிறகடித்துச் செல்லும் இப்புராதனச் செல்வங்கள் நம் கண்கள் முன்பாகவே மங்கிப் போகச் செய்துவிட்டால் நாம் எவ்வளவு துரதிர்ஷ்டம் பிடித்தவர் கள் என்பது விளங்கும். முன்னோர் கட்டி வைத்த கோவில்களைக் கேவலம் பழுது பார்ப்பதினால் ஏற்படும் சிரமங்களிலிருந்து தெரிய வருகிறதன்றோ?

இம்மாதிரியான காரியங்களில் நாம் வெற்றி பெற வேண்டுமானால், எடுத்த காரியம் சுலபமாக முடிவெய்த வேண்டுமென்றால் நாம் தூய்மையுடன் நடந்து கொள்ளப் பழகிக்கொள்ளல் வேண்டும். நம்மிடத்தில் மக்களுக்கு நம்பிக்கை ஏற்படும் வகையில் நடந்து கொள்ளல் அவசி யம், 'இரக்கப் போனாலும் சிறக்கப் போ' என்றார்கள் ஆன்றோர்கள். சிறிதளவு வாய்மையும், சாமர்த்தியமும்

படைத்துக்கொண்டு, அத்துடன் நில்லாமல் செயல் முறையிலும் விரைவில் நடத்திக் காண்பித்தால் தோல்வியைப் பற்றி நாம் ஏன் சிந்திக்க வேண்டும். பொறுமை வேண்டும். மக்களின் பூரண ஆதரவும், நம்பிக்கையும் நம்மீது வீழ்ந்து வெற்றியின் பாதை தானே விரிந்து செல்கின்றது. நம்முன் பூதாகாரமாய்க் காட்சியளிக்கும் எவ்வித அலுவல்களும் கைப்பாவையாய் முடியுமென்பதில் சந்தேகம் வேறுமுண்டோ?

பாழடைந்து கொண்டிருக்கும் நம் ஆலயங்கள் யாவும் புதுமைப் பொலிவுடன் திகழ்ந்து நமக்கும் இனி வரப் போகும் நம் சந்ததியார்களுக்கும் பேரின்பத்தை யளிக்க வேண்டுமென்பதே எனது பேரவா. அதற்கான நடவடிக்கைகளில் உடனடியாக இறங்குங்கள். போரும், பஞ்சமும், பிணியும் தாமே பறந்துபோய் நாடு செழிப்புறும்.

ஸ்ரீ நல்லாண்டவ சுவாமி திருப்பணி, கும்பாபிஷேகம் ஆகியவைகளில் பங்குகொண்ட அன்பர்களுக்கு இறைவன் வற்ருத வளத்தைப் பல தலைமுறைகளுக்கு அளிக்கும்படி வேண்டுகிறேன்.

— சுபம் —

திருச்சினுப்பள்ளி யுனைடெட் பிரிண்டர்ஸ் லிமிடெட், திருச்சி.